**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI**

| | | |
|---|---|---|
| Case number | : | **CC 76/2025** |
| Deposition of witness | : | **PW-1** |
| Name | : | பூங்கொடி |
| Husband Name | : | பழனிச்சாமி |
| Age | : | **48** |

***Accused present.***

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 20.01.2026.*

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது சின்னையன் கவுண்டன் வலசு, தீர்த்தம் பள்ளத்தில் வசித்து வருகிறேன். நான் கம்பெனிக்கு வேலைக்கு சென்று வருகிறேன். கடந்த 08.07.2025 ஆம் தேதி காலை 08.15 மணியளவில் நான் கம்பெனிக்கு வேலைக்கு செல்வதற்காக நடந்து சென்றேன். சின்னையன் கவுண்டன் வலசு ஆதியூர் ரோட்டில் நான் நடந்து சென்ற போது, கருப்பு வெள்ளை நிற யமஹா வாகனத்தில் இரண்டு நபர்கள் எதிரே வந்தார்கள். என்னை அவர்கள் கடந்து சென்று விட்டு மீண்டும் திரும்பி என்னை நோக்கி பின்னால் வந்தார்கள். நான் திரும்பி பார்ப்பதற்குள், அந்த வாகனத்தின் பின்னால் அமர்ந்து வந்த நபர் எனது கழுத்தில் அணிந்திருந்த இரண்டு பவுன் செயினை பறித்துக் கொண்டு சென்று விட்டார்கள்.

2. சம்பவத்தின் போது வாகனத்தின் பின்னால் அமர்ந்து வந்த நபர் சற்று தடிமனாக, கருப்பு நிற முழு கை சட்டை அணிந்திருந்தார், அதில் வெள்ளை பூக்கள் டிசைன் இருந்தது. வாகனத்தை ஓட்டிய நபர் ஒல்லியாக இருந்தார். கருப்பு நிற சட்டை

அணிந்திருந்தார். நான் சத்தம் போட்டேன். எனக்கு சத்தம் கேட்டு மூர்த்தி மற்றும் நடராஜ் வந்தார்கள். நான் நடந்த விவரத்தை சொன்னேன். அவர்கள் இருவரும் அந்த நபர்களை தேடி சென்றார்கள் ஆனால் அவர்கள் கிடைக்கவில்லை.

3. அன்றைய தினமே காலை 9 மணி அளவில் நான் குன்னத்தூர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது. புகாரை நான் தான் எழுதிக் கொடுத்தேன். **(புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

4. பின்னர் 11.07.2025 ஆம் தேதி போலீசார் என்னை அழைத்ததன் பேரில், காவல் நிலையத்திற்கு சென்றபோது பறிக்கப்பட்ட எனது நகை அங்கு இருந்தது. அங்கு இருந்த நபர்களை பார்த்து அவர்கள் தான் என்னிடம் நகை பறிப்பில் ஈடுபட்டவர்கள் என்று அடையாளம் காட்டினேன். தற்போது நீதிமன்றத்தில் ஆஜரியில் உள்ள எதிரி தான் சம்பவ சமயத்தில் எனது நகையை பறித்து சென்றார். (சாட்சி எதிரியை அடையாளம் காட்டுகிறார்). நான் எனது செயினை நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக் கொண்டேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள செயினை தான் நான் நீதிமன்றத்தில் பெற்றுக் கொண்டேன். **(மேற்படி புகைப்படம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

5. சாட்சியிடம், கேமரா பதிவுகள் நீதிமன்றத்தில் ஒளிபரப்பு செய்யப்பட்டு அதில் வரும் யமஹா ஆர்15 வாகனத்தில் பயணிக்கும் இருவர்தான் சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் என்று சாட்சி அடையாளம் காட்டுகிறார். இந்த வழக்கு சம்பந்தமாக

போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

1. சம்பவ இடத்தில் நான் மட்டும் தான் இருந்தேன். சம்பவ இடத்தில் கடைகள் எதுவும் இல்லை, சற்று தள்ளி இரண்டு மூன்று வீடுகள் இருந்தது. மூர்த்தி மற்றும் நாகராஜன் வீடு சம்பவ இடத்தில் இருந்து சுமார் ஒரு கிலோ மீட்டர் தள்ளி உள்ளது. நான் சம்பவம் பற்றி சுப்பிரமணி என்பவருக்கு தகவல் சொன்னதின் பெயரில் அவர் பத்து நிமிடத்தில் சம்பவ இடத்திற்கு வந்தார். சம்பவம் நடந்து அந்த வாகனம் சற்று தூரம் சென்றவுடன் நடராஜ் மற்றும் மூர்த்தி அங்கு வந்து விட்டார்கள். அவர்கள் அந்த வாகனத்தையும் பார்த்தார்கள். மற்றவர்கள் எல்லாம் நான் தகவல் சொல்லிய பின்பு 5 - 10 நிமிடத்தில் அங்கு வந்தார்கள்.

2. என்னுடன் காவல் நிலையத்திற்கு மூர்த்தி, நடராஜ், சுப்பிரமணி, கவின் ஆகியோர் வந்தார்கள். அன்றைய தினமே அவர்களையும் விசாரித்து போலீசார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள் என்றால் ஆமாம். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை இரண்டு அல்லது மூன்று முறை விசாரித்து இருப்பார்களா என்றால் தினமும் இரண்டு மூன்று முறை என்னை காவல் நிலையத்திற்கு வரச் சொல்வார்கள், விசாரிப்பார்கள்.

3. இந்த வழக்கில் உள்ள மற்ற சாட்சிகளை போலீசார் எப்போது எங்கு வைத்து விசாரணை செய்தார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. நான் புகார் கொடுத்த சமயத்தில் களவு போன எனது செயினின் ரசீது காவல் நிலையத்தில்

கொடுக்கவில்லை என்றால் கொடுக்கவில்லை. எனது மகனை போலீசார் விசாரணை செய்தார்களா என்றால் விசாரணை செய்தார்கள். களவு போனதாக சொல்லப்படும் செயின் நான் எத்தனை ஆண்டுகளாக அணிந்து வந்தேன் என்பதை போலீசாரின் விசாரணையின் போது சொல்லி உள்ளேன் என்றால் சொல்லி உள்ளேன்.

4. நான் களவு போன எனது செயின் எங்கு வாங்கப்பட்டது என்பதை எனது புகாரிலும், விசாரணை வாக்குமூலத்திலும் சொல்லி உள்ளேன் என்றால் கிருஷ்ணாவில் வாங்கியது என்பதை சொல்லி உள்ளேன். சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் மாஸ்க் அணிந்திருந்ததால் அவர்களது முகத்தை நான் சரிவர பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் புகாரிலும், விசாரணை வாக்குமூலத்திலும் எதிரிகள் எத்தகைய முகத்தவசம் அணிந்து இருந்தார்கள் என்பதை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

5. நான் புகாரிலோ, எனது விசாரணை வாக்குமூலத்திலோ சம்பவத்தில் ஈடுபட்ட நபர்களின் தோராய வயதினை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சொல்லி உள்ளேன். கைப்பற்றிய நகை எந்த ஒரு சேதாரமும் இல்லாமல் இருந்ததா என்றால் கட்டாகியிருந்த நகையை ஜாயின் செய்திருந்தார்கள். காவல் நிலையத்தில் என்னிடம் காண்பிக்கப்பட்ட இரண்டு மூன்று நகைகளுக்கு இடையே இந்த வழக்கு நகையை நான் அடையாளம் காட்டினேன்.

6. நான் புகார் கொடுத்த அன்றே போலீசாரை சுமார் பத்து மணிக்கு மேலாக சம்பவ இடம் அழைத்துச் சென்று சம்பவ இடத்தை காண்பித்தேன். சம்பவத்தில்

பயன்படுத்தப்பட்ட வாகனத்தின் பதிவு எண்ணை போலீசில் தெரிவித்தேனா என்றால் அந்த வாகனத்திற்கு பதிவு எண் கிடையாது. சம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட yamaha வாகனத்தின் மாடல் பற்றி புகாரிலும், விசாரணை வாக்குமூலத்திலும் சொல்லி உள்ளேனா என்றால் CCTV கேமரா பதிவில் உள்ளது. நான் சத்தம் போட்டதால் அருகில் வசித்த சுபாராவ், வனிதா, சுந்தர், வெங்கடாசலபதி ஆகியோர் வந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி நபர்கள் வந்த அதே சமயத்தில் மூர்த்தி மற்றும் நடராஜ் அங்கு வந்தார்கள்.

7. நான் குடியிருக்கும் அதே பகுதியில் தான் சாட்சிகள் மூர்த்தி, நடராஜன், சுப்பிரமணியன், ராஜசேகர், ரவிக்குமார், சுசீலா, லோகநாதன், செந்தில்நாதன், ரத்தன்குமார், சந்தோஷ் வேலு, குணசேகரன், மயில் குமார் ஆகியோர் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். 11.07.2025 ஆம் தேதி நான் வேறு ஏதும் முக்கியமான வேலைக்கு செல்லவில்லை என்றால், மாலை 5 மணி அளவில் என்னை காவல் நிலையம் வரச் சொன்னார்கள். நான் புகார் கொடுத்துவிட்டு வீட்டுக்கு சென்றபோது மதியம் சுமார் 12 மணி இருக்கும். எனது அக்கா தங்கமணி தான் என்னை காவல் நிலையத்தில் வெளியே இருந்து எனது வீடு வரை அழைத்துச் சென்றார்.

8. நான் சொன்ன நாள் நேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், போலீசார் கேட்டதின் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**அரசு தரப்பில் மறு விசாரணை:**

சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் முக கவசம் அணிந்திருந்த நிலையில் எவ்வாறு அந்த நபர்களை காவல் நிலையத்தில் அடையாளம் கண்டீர்கள் என்றால் அவர்களது உயரம், தலைமுடி, பாதி முகம் ஆகியவற்றை வைத்து அடையாளம் கண்டேன்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

B
DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2026.01.20 19:25:52 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI

| | | |
|---|---|---|
| Case number | : | **CC 76/2025** |
| Deposition of witness | : | **PW-2** |
| Name | : | **மூர்த்தி** |
| Father Name | : | **வெள்ளிங்கிரி** |
| Age | : | **38** |

***Accused present.***

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 20.01.2026.*

**முதல் விசாரணை**

1. நான் தற்போது சின்னையன் கவுண்டன் வலசு, தட்டான் சிறையில் வசித்து வருகிறேன். நான் பனியன் கம்பெனிக்கு வேலைக்கு சென்று வருகிறேன். கடந்த 08.07.2025 ஆம் தேதி காலை 08.15 மணியளவில் நான் மற்றும் நடராஜ் நடைபயிற்சி சென்று விட்டு சின்னையென் கவுண்டன் வலசு வழியே நடந்து வந்த போது, அதே சாலையில் எங்களுக்கு எதிரே சுமார் 50 அடி தொலைவில் நடந்து வந்த பூங்கொடி என்ற ஒரு பெண்மணி தனது செயினை அறுத்துவிட்டதாக சத்தம் போட்டார்.

2. அப்போது எதிரே யமஹா வாகனத்தில் வந்த இருவரை நாங்கள் பிடிக்க முயற்சி செய்தோம். நாங்கள் பின்னால் விரட்டி ஓடிப் பிடிக்க முயன்ற போது வாகனத்தை பிடிக்க முடியவில்லை. சிறிது நேரம் கழித்து போலீசார் அங்கே வந்து விசாரணை செய்தார்கள். பின்னர் 11.07.2025 ஆம் தேதி போலீசார் அழைத்தன் பேரில் நானும், நடராஜனும் காவல் நிலையம் சென்றோம்.

3. அங்கே இருந்த இருவரை பார்த்து அடையாளம் காண்பித்தேன். சம்பவ சமயத்தில் அவர்கள் மாஸ்க் அணிந்திருந்தார்கள். காவல் நிலையத்தில் மாஸ்க் இல்லாமல் இருந்தார்கள். சம்பவ சமயத்தில் வாகனத்தை ஓட்டிச் சென்ற நபர் ஒல்லியாக இருந்தார், பின்னால் அமர்ந்து வந்த நபர் சற்று தடிமனாக இருந்தார். அந்த நபர்களை பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியும். தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ள நபர் வாகனத்தின் பின்னால் அமர்ந்து வந்தவர் ஆவார். (சாட்சி எதிரியை அடையாளம் காட்டுகிறார்).

4. சாட்சியிடம், CCTV கேமரா பதிவுகள் நீதிமன்றத்தில் ஒளிபரப்பு செய்யப்பட்டு அதில் வரும் யமஹா ஆர்15 வாகனத்தில் பயணிக்கும் இருவர்தான் சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் என்று சாட்சி அடையாளம் காட்டுகிறார். மேற்படி இருசக்கர வாகனத்தையும் நான் காவல் நிலையத்தில் பார்த்தேன். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**குறுக்கு விசாரணை**</u>

1. எனக்கு புகார்தாரரை எத்தனை ஆண்டுகளாக தெரியும் என்றால், நான் நடை பயிற்சி செல்வதன் மூலம் அவரை சுமார் ஒரு வருடமாக பார்த்துள்ளேன். புகார்தாரர் எனக்கு தெரிந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பூங்கொடியின் வீடும், எனது வீட்டிற்கும் இடையே சுமார் ஒரு கிலோ மீட்டர் இடைவெளி இருக்கும். வழக்கமாக எனது கம்பெனியை நான் எப்போது திறப்பேன் என்றால், காலை வேலைக்கு ஆட்கள் வந்துவிட்டு எனக்கு தகவல்

தெரிவித்தவுடன் போய் திறப்பேன். பூங்கொடி எனது கம்பெனியில் வேலை செய்கிறாரா என்றால் இல்லை.

2. சம்பவத்தன்று நான் எப்போது கம்பெனி திறந்தேன் என்றால், அன்றைய தினம் நான் செல்வதற்கு தாமதமானதால் வேலை ஆட்களே வீட்டிற்கு வந்து சாவி வாங்கி சென்று கம்பெனியை திறந்து கொண்டார்கள். நான் சம்பவ இடத்தில் சுமார் அரை மணி நேரம் இருந்திருப்பேன். பின்னர் மீண்டும் போலீசார் அழைத்தபோது சம்பவ இடம் வந்தேன். நடராஜனும் என்னுடன் தான் இருந்தார். மற்ற சாட்சிகள் நாங்கள் சம்பவ இடத்திற்கு சென்ற பின்புதான் வந்தார்களா என்றால் ஆமாம். நான் போலீசாரின் விசாரணையின் போது சம்பவத்தில் ஈடுபட்ட நபர்கள் எந்த நிற மாஸ்க் அணிந்திருந்தார்கள் என்று சொன்னேனா என்றால் மாஸ்க் அணிந்திருந்ததாக சொன்னேன், ஆனால் அதன் நிறத்தை சொல்லவில்லை.

3. போலீஸ்சார் விசாரித்தபோது அந்த நபர்களை பார்த்தால் அடையாளம் தெரியுமா என்று கேட்டார்கள், நான் ஓரளவு தெரியும் பார்த்தால் அடையாளம் கூறுவேன் என்று சொன்னேன். போலீஸ்சார் விசாரணையின் போது சம்பவத்தில் ஈடுபட்ட நபர்களின் தோராய வயதினை சொல்லி உள்ளேனா என்றால் இல்லை. போலீசார் என்னை சம்பவ இடத்தில் வைத்து விசாரித்தார்கள். நான் விசாரணையின் போது கூறிய தகவல்களை போலீசார் ஒரு நோட்டில் எழுதிக் கொண்டார்கள்.

4. சம்பவத்தின் போது பூங்கொடி சத்தம் போடவே அருகில் இருந்தவர்கள் எல்லாம் ஓடி வந்தார்கள் என்றால் சரிதான். சம்பவ இடத்தின் அருகே கடைகள் இல்லை

சற்று தள்ளி வீடுகள் அமைந்துள்ளது. சம்பவ இடத்தில் வைத்துதான் எனது நண்பர் நடராஜையும் போலீஸ் விசாரித்தார்கள். அன்றைய தினம் நான் டீ குடித்த பேக்கரியின் பெயர் டீ டைம். அது சம்பவ இடத்திலிருந்து சுமார் 500 மீட்டர் தள்ளி உள்ளது. போலீசார் என்னை சம்பவ இடத்தில் வைத்து விசாரித்தார்கள், பின்னிட்டு விசாரிக்கவில்லை, 11.07.2025 தேதியில் காவல் நிலையம் சென்றோம். போலீசார் விசாரணையின் போது களவு போன நகையின் மதிப்பை நான் சொல்லவில்லை.

5. நான் சொன்ன நாள் நேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், போலீசார் கேட்டதின் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2026.01.20 19:26:05 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI**

| | | |
|---|---|---|
| Case number | : | **CC 76/2025** |
| Deposition of witness | : | **PW-3** |
| Name | : | நடராஜ் |
| Father Name | : | சுப்பிரமணியம் |
| Age | : | **42** |

***Accused present.***

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 20.01.2026.*

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது சின்னையன் கவுண்டன் வலசு, தட்டான் சிறையில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 08.07.2025 ஆம் தேதி காலை 08.15 மணியளவில் நான் மற்றும் மூர்த்தி நடைபயிற்சி சென்று விட்டு, டீ குடித்துவிட்டு, சின்னையைன் கவுண்டன் வலசு வழியே நடந்து வந்த போது, அதே சாலையில் எங்களுக்கு எதிரே சுமார் 50 அடி தொலைவில் நடந்து வந்த ஒரு பெண்மணி தனது செயினை அறுத்துவிட்டதாக சத்தம் போட்டார். ஆர் 15 வாகனத்தில் வந்தவர்கள் அவரது செயினை பறித்துவிட்டார்கள்.

2. அப்போது நாங்கள் பிடிக்க முயற்சி செய்தோம். நாங்கள் பின்னால் விரட்டி ஓடிப் பிடிக்க முயன்ற போது வாகனத்தை பிடிக்க முடியவில்லை. சிறிது நேரம் கழித்து போலீசார் அங்கே வந்து விசாரணை செய்தார்கள். அதனால் நாங்களும் சம்பவ இடம் வந்தோம். பின்னர் 11.07.2025 ஆம் தேதி போலீசார் அழைத்தன் பேரில் நானும், மூர்த்தியும் காவல் நிலையம் சென்றோம்.

3. அங்கே இருந்த இருவரையும் மற்றும் சம்பவத்தின்போது எதிரிகள் பயன்படுத்திய R15 இருசக்கர வாகனத்தையும் பார்த்து அடையாளம் காண்பித்தேன். சம்பவ சமயத்தில் வாகனத்தை ஓட்டிச் சென்ற நபர் ஒல்லியாக இருந்தார், பின்னால் அமர்ந்து வந்த நபர் சற்று தடிமனாக இருந்தார். அந்த நபர்களை பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியும். தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ள நபர் வாகனத்தின் பின்னால் அமர்ந்து வந்தவர் ஆவார். (சாட்சி எதிரியை அடையாளம் காட்டுகிறார்).

4. சாட்சியிடம், CCTV கேமரா பதிவுகள் நீதிமன்றத்தில் ஒளிபரப்பு செய்யப்பட்டு அதில் வரும் யமஹா ஆர்15 வாகனத்தில் பயணிக்கும் இருவர்தான் சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் என்று சாட்சி அடையாளம் காட்டுகிறார். மேற்படி இருசக்கர வாகனத்தையும் நான் காவல் நிலையத்தில் பார்த்தேன். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

1. எனக்கு புகார்தாரரை எத்தனை ஆண்டுகளாக தெரியும் என்றால், இரண்டு மூன்று வருடமாக தெரியும். புகார்தாரர் மற்றும் மூர்த்தி எனக்கு தெரிந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் டீ குடித்த கடையில் இருந்தவர்களும் பூங்கொடியின் சத்தம் கேட்டு ஓடி வந்து இருப்பார்களா என்றால் டீக்கடைக்கும், அந்த இடத்திற்கும் சுமார் 500 மீட்டர் தூரம் இருக்கும்.

2. சம்பவ இடத்தில் கடைகள் இல்லை, வீடுகள் சற்று தள்ளி தள்ளி இருக்கும்.

சம்பவ சமயத்தில் அந்த நபர்கள் கருப்பு நிற மாஸ்க் அணிந்திருந்ததாக போலீஸ் விசாரணையில் கூறியுள்ளேன். சம்பவம் பற்றி சுப்பிரமணிக்கு பூங்கொடி தகவல் சொன்னார். சம்பவ சமயத்தில் எதிரிகள் பயன்படுத்திய வாகனத்தின் பதிவு எண் தெரியமா என்றால் தெரியாது. சம்பவ இடத்தில் எத்தனை சாலைகள் உள்ளது என்றால் மூன்று சாலைகள் உள்ளது. சம்பவத்தில் இருந்து எனது வீடு சுமார் 1 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. சம்பவ இடத்திலிருந்து பூங்கொடியின் வீடு எவ்வளவு தொலைவில் உள்ளது என்றால் சுமார் 50 அடி தொலைவில் உள்ளது. பூங்கொடியின் மகன் சம்பவ இடம் வந்தாரா என்றால் ஞாபகம் இல்லை. நானும் எனது நண்பரும் டீ குடித்துக் கொண்டிருந்த கடையின் பெயர் டீ ஸ்டாப். மேற்படி கடை எந்த திசையை நோக்கி உள்ளது என்றால் ஞாபகம் இல்லை.

3. சம்பவ இடத்தின் அருகே வசிக்கும் வனிதா என்பவரை விசாரித்து போலீசார் வாக்குமூலம் பதிவு செய்தார்களா என்றால் செய்தார்கள். சம்பவ இடத்திற்கு போலீசார் வந்தபோது மணி சுமார் காலை 10 இருக்கும். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை சம்பவ இடத்தில் வைத்தும், பின்னர் 11 ஆம் தேதி காவல் நிலையத்தில் வைத்தும் விசாரித்துள்ளார்கள். என்னை மொத்தம் இருமுறை விசாரித்துள்ளார்கள். பூங்கொடி அம்மாவின் களவு போன நகையின் மதிப்பு எனக்கு தெரியாது.

4. புகார் கொடுக்க காவல் நிலையத்திற்கு பூங்கொடி உடன் நானும், மூர்த்தியும் சென்றோம். நான் சொன்ன நாள் நேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், போலீசார் கேட்டதின் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2026.01.20 19:26:17 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,

ஊத்துக்குளி.